உ

கடவுள் துணை.

# சாவல்பாட்டு.





சென்னை

வித்யாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

13

உ

வேலுமயிலுந்துணை.

# சாவல்பாட்டு.

---

காப்பு-கலிவிருத்தம்.

தேவதேவர்கள் போற்றிடுமீசன்
சேவடிதனை சென்னியிலேவைத்து
சாவலின்கதை சாற்றிட பூவினில்
ஆவலாய்வரு மைங்கரன்காப்பதே.

கண்ணிகள்-இ-ப்-மிலாப்புரி-அடதாளப்-சாப்பு.

என்சாவல்போனவிட மெனக்குதெரியாதே
யெந்தன் துரைரங்கசாமி யெனைசொல்லுவாரோ
என்னசொல்லுவாரோ அவர்க்கிஷ்டமுள்ளசாவல்
இஷ்டமுள்ளசாவல்தனை யெவளோபிடித்தாளோ
நல்லசிறுதொட்டில்கட்டி நான்வளர்த்தசாவல்
நான்வளர்த்தசாவல்தனை நஷ்டமிட்டவனாரோ

தங்கத்திநூல்சதங்கைகட்டி தரையில்விட்டசாவல்
தரையில்விட்டசாவல்தனை சாற்றிக்கொண்டவளாரோ
முத்துமணிகட்டியெந்தன முன்னேவிட்டசாவல்
முன்னேவிட்டசாவல்தனை மூடிக்கொண்டவளாரோ
பவழமணிகட்டியிப்போ பார்த்துவிட்டசாவல்
பார்த்துவிட்டசாவல்தனை பதுங்கவைத்தவளாரோ
வெள்ளியினுல்சதங்கைகட்டி வெளியில்விட்டசாவல்
வெளியில்விட்டசாவல்தனை மடக்கிவைத்தவளாரோ
பொன்னினுல்சதங்கைகட்டி போகவிட்டசாவல்
போகவிட்டசாவல்தனை பிடித்துக்கொண்டவளாரோ
காதுகுத்திகடுக்கனிட்டு கடையில்விட்டசாவல்
கடையில்விட்டசாவல்தனை கண்டழைத்தவளாரோ
கொண்டைதனில்குப்பிகட்டி குலாவிவிட்டசாவல்
குலாவிவிட்டசாவல்தனை கூட்டிப்போனவளாரோ
பச்சைசரக்கைபளபளென்ன பறந்துவருஞ்சாவல்
பறந்துவருஞ்சாவல்தனைப் பார்த்தணைத்தவளாரோ
துத்தியப்பூவர்ணமுள்ள துரைசாமியின்சாவல்
துரைசாமியின்சாவலுக்கு சூதுசெய்தவளாரோ
வர்ணமயில்ரேகைபின்ன வருகுமெங்கன்சாவல்
வருகுமெங்தன்சாவல்தனை வழிமறித்தவளாரோ

அஞ்சுவர்ணகிறமுடைய அன்னநடைசாவல்
அன்னநடைசாவல்தன்னை அடக்கிக்கொண்டவளாரோ
கூவுங்குயில்தொனியுடனே கூவிவருஞ்சாவல்
கூவிவருஞ்சாவல்தன்னை கூப்பிடடவளாரோ
பாப்பாரவீதியெங்கும் பறந்துவருஞ்சாவல்
பறந்துவருஞ்சாவல்தன்னை பார்த்தழைத்தவளாரோ
அரசர்கள்வீதிகளில் ஆடிவருஞ்சாவல்
ஆடிவருஞ்சாவல்தன்னை ஆதரித்தவளாரோ
வணிகர்தெருவெங்கும்வழக் காடிவருஞ்சாவல்
வழக்காடிவருஞ்சாவல்தன்னை வளைத்துக்கொண்டவளாரோ
கோமட்டிவீதியெங்கும் கொக்கரித்துவருஞ்சாவல்
கொக்கரித்துவருஞ்சாவல்தன்னை கொள்ளைகொண்டவளாரோ
குச்சிலியர்வீதியெங்கும கூத்தாடிவருஞ்சாவல்
கூத்தாடிவருஞ்சாவல்தன்னை கூப்பிட்டவளாரோ
வெள்ளாழர்வீதியில் விளையாடிவருஞ்சாவல்
விளையாடிவருஞ்சாவல்தன்னை வெறுக்கச்செய்தவளாரோ
தச்சர்தெருவெங்குங்குதித் தாடிவருஞ்சாவல்
ஆடிவரும்சாவல்தன்னை அழைத்துக்கொண்டவளாரோ
கோட்டைகொத்தளங்கள் குலாவிவருஞ்சாவல்
குலாவிவருஞ்சாவல்தன்னை பிசகுசெய்தவளாரோ

கன்னூரவீதியெங்கும் கலந்துவருஞ்சாவல்
கலந்துவருஞ்சாவல்தனை கணைமிட்டவளாரோ
எட்டுதெருசுத்திவரு மெந்தனிடசாவல்
எந்தனிடசாவல்மீதில் இஷ்டம்வைத்தவளாரோ
பட்டணத்துவீதியெங்கும் பாய்ந்துவருஞ்சாவல்
பாய்ந்துவருஞ்சாவல்தனை பதைத்தழைத்தவளாரோ
பூவின்கடைபுழுதிதனில் புரண்டுவருஞ்சாவல்
புரண்டுவருஞ்சாவல்தனை பிடித்துகொண்டவளாரோ
பெரியகடைவீதியெங்கும் பேரெடுத்தசாவல்
பேரெடுத்தசாவல்தனை பிசகுசெய்தவளாரோ
செங்காங்கடைவீதியெங்குந் திரிந்துவருஞ்சாவல்
திரிந்துவருஞ்சாவல்தனை திருடினவளாரோ
கொத்தவால்சாவடியில் கொக்கரிக்குஞ்சாவல்
கொக்கரிக்குஞ்சாவல்தனை கோரிக்கொண்டவளாரோ
மார்க்கட்டுவீதியெங்கும் மருவிவருஞ்சாவல்
மருவிவருஞ்சாவல்தனை மறைத்துக்கொண்டவளாரோ
அந்தமிருமண்ணடியி லாடிவருஞ்சாவல்
ஆடிவருஞ்சாவல்மீது அன்புவைத்தவளாரோ
தங்கசாலைவீதியெங்கும் தங்கிவருஞ்சாவல்
தங்கிவருஞ்சாவல்தனை சதிசெய்தவளாரோ

பெத்துநாய்க்கன்பேட்டை யெங்கும் புகழ்பெருகுஞ்சாவல்
　　புகழ்பெருகுஞ்சாவல்மீதில் பிரியம்வைத்தவளாரோ
விலைமாதர்கள்வீதியில் விளையாடிவருஞ்சாவல்
　　விளையாடிவருஞ்சாவல்தனை வேறுசெய்தவளாரோ
காளியுடகோயிலுக்கு கணமாய்விட்டசாவல்
　　கணமாய்விட்டசாவல்தனை கட்டினவளாரோ
அங்காளம்மன்கோவிலுக்கு அடிமைவிட்டசாவல்
　　அடிமைவிட்டசாவல்தனை அணைத்துக்கொண்டவளாரோ
எல்லைபிடாரியர்க்கு யேத்திவிட்டசாவல்
　　யேத்திவிட்டசாவல்மீது இன்பங்கொண்டவளாரோ
பாவாடைராயனுக்கு பார்த்துவிட்டசாவல்
　　பார்த்துவிட்டசாவல்தனை பதிகுலைத்தவளாரோ
காத்தான்கருப்பனுக்கு காட்டிவிட்டசாவல்
　　காட்டிவிட்டசாவல்தனை கைப்பிடித்தவளாரோ
பேர்பெரியமுனியனுக்கு பிரார்த்திவிட்டசாவல்
　　பிரார்த்திவிட்டசாவல்தனை பேதித்தவளாரோ
சாவல்தனைக்காணமலே தயங்குதென்னாவி
　　எங்கள் துரைரங்கசாமி யென்னசொல்லுவாரோ

மாயமலைப்பழனிவடிவேலர் கிருபைசெய்வாய்
மனதுகுறைவையாமலே வரச்செய்குவாய்
காளிமகாமாயியுந்தன் அடியமலர்போற்றி
கலங்கிடாமல்சாவல்தனை கடுகவரச்செய்வாய்
மாமதுரைமேயெந்தன் மனதுதயங்காமல்
வர்ணமுள்ளசாவல்தனை வருகவருட்செய்வாய்
ஆரணிபெரியபாளையத்தி லமர்ந்தயெந்தன்தாயே
அன்னநடைச்சாவல்தனை அழகாய்வரச்செய்வாய்
கானமலையிருளாயுந்தன் கழலிணையைப்பணிந்தேன்
கணவன்வராமுன்னம்சாவல கடுகவரச்செய்வாய்
அண்ணமார்கள்கன்னியர்கள் அய்யமார்கள்துணைசெய்ய
அன்பாயெந்தன்சாவ்ல்தனை அனுக்கிரகஞ்செய்வீரே
சாதங்கறிவிளநீர்சுகி தாம்பூலம்பாயாசம்
தக்கபடிமொச்சையெள் ளுருண்டையுடன்படைப்பேன்
கன்னவிளங்கரும்புகற்கண்டுசர்க்கரையும்
கனியவாழைபழவர்க்கந்தேன் தினைமாவுடன்படைப்பேன்
பூவாடைகாரியர்க்கு பொங்கல்மிகச்செய்வேன்
புள்ளிகிறச்சாவல்தனை புகழாய்வரச்செய்வீர்

சொன்னசொல்லைத்தவறேனென்றும் சுந்திரதேவர்களே
துணைவனவராமுன்னேசாவல் துரிதமாய்வரச்செய்வீர்
கண்ணேநவமணியேயென்றன் கருத்தேபெங்கேபோனாய்
கட்டுண்டிருந்தாயோவெந்தன் கவனமறந்தாயோ
ஆட்டிவளர்த்தேனேவுனக் காகவலைந்தேனே
அய்யன்ரங்கசாமிகண்டா லடிப்பார்வைகுவாரே
ஆர்செய்தபுண்ணியமோ அன்பாகவந்ததுவே
தேவர்களும்வாழிதிருச் சபையோர்களும்வாழி
மூவர்களும்வாழிமுடி மன்னர்களும்வாழி
ஆவலுடன்வினவுமிஷ்ட அம்மையரும்வாழி
அச்சிலடித்தோர்களும்வாழி பதங்கேட்டோர்களும்வாழி
வாழிவாழியென்றுவையகத்தோர்தாம்வாழி.

சாவல்பாட்டு.

முற்றிற்று.